[*2021 பிப்ரவரி 27*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழில், அறிவியல் தமிழை நான்காம் தமிழாகச் சேர்த்த மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இதய தெய்வம் அம்மா அவர்கள் வழியிலே இன்றையதினம் அறிவியல் தமிழுக்கு மெருகூட்டி, அதற்கு வலு சேர்க்கின்ற வகையில், 6 ஆம் வகுப்பில் படிக்கின்ற பள்ளி மாணவர்களுக்கு எல்லாம் அறிவியலில் கணினி அறிவியலைப் புகுத்தி, மாணவச் சமுதாயத்தின் கல்விக் கடவுளாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தீட்டுகின்ற அனைத்துத் திட்டங்களையும் செயலாக்குவதற்கு, அவருக்கு ஆக்கம் அளித்து, உறுதுணையாகவும் இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். இந்தக் கேள்விக்குப் பதில் அளித்த துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், வாய்ப்பளித்த தங்களையும் வணங்கி மகிழ்கின்றேன்.*

சேலம் மாவட்டத்தில் உள்ள இந்த இசைப் பள்ளியில் சேலம் மண்டலத்தில் இருக்கின்ற அனைத்து மாணவர்களையும் ஒன்றிணைத்து பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில், நாடகக் கலைக்கு குருவாக இருக்கின்ற சங்கரதாஸ் சுவாமிகளின் குருபூஜை விழாவினை அரசு விழாவாக அறிவித்து, அவருக்குப் பெருமை சேர்க்கின்ற விதத்தில், இன்றையதினம் கலைஞர்களுக்கெல்லாம் உற்சாகத்தை ஊட்டுகின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். உலக நாடக தினம் என அறிவித்து, அதனைத் தொடர்ந்து சிறப்பாகக் கொண்டாடி, சேலம் மாவட்டத்தில், உலக நாடக தினத்தில் சுவாமி எழுதிய வள்ளித் திருமணம் நாடகத்தை அரங்கேற்றம் செய்து வைத்துள்ளார்கள். அந்த வகையில், சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற இசைப் பள்ளியில் ஆண்டு முழுவதும் செயல்படுத்தக்கூடிய வகையில், பெருமை சேர்க்கின்ற வகையில், இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறையை அமைத்துத்தர வேண்டுமென்றும், இசைப் பள்ளியை இசைக் கல்லூரியாக உருவாக்கி, தரமுயர்த்தித் தர வேண்டுமென்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

2021 பிப்ரவரி 27]

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை துறைக்கு அனுப்பப்படும். அதேவேளையில் புரசை தம்பிரான் அவர்களுக்கு ஏற்கெனவே நமது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரில் இயங்கிக்கொண்டிருக்கின்ற இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்தில் மதிப்புறு முனைவர் என்ற டாக்டர் பட்டம் சென்ற ஆண்டு வழங்கப்பட்டுள்ளது என்பதை நன்றியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

44—

மீன் விற்பனைக் கூடம்

***34394—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரில் மீன் விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15–வது சட்டமன்றப் பேரவையின் கடைசி கூட்டத் தொடர் முடிகின்ற இந்தவேளையில், மீண்டும் 16–வது சட்டமன்றக் கூட்டத் தொடரில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அமையும், அது இன்றிலிருந்து தொடக்கம் என்றவகையில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) 'ஜெயமே ஜெயம்' என்று அம்மா அவர்களின் அரசாக இன்றைக்கு*

இந்தக் கேள்வியை, கடைசியாக எடுத்துக்கொண்டுள்ளீர்கள். சென்டிமென்ட்டாக நாங்கள்தான் மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்பதற்கு அடையாளமாக இன்றைக்கு இது இருக்கின்றது. சிறப்பான ஒரு நல்லாட்சியை நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்து செயலாற்றிவரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சியில் புதிய மீன் விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் குறித்த கோரிக்கை மீண்டும் துறைக்கு அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். “வாராரு; விடியல் தரப் போறாரு” எனக் கூறுபவர்களுக்கு நிரந்தர இருளைப் பரிசாகக் கொடுத்து, “வெற்றிநடை போடும் தமிழகமே” என்று சொல்லும் வகையில் நிரூபித்துக் காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளை சட்டமன்றத்தில் மட்டுமல்ல; தமிழகத்தில் எங்கும் காணாமல் செய்த நம் குடும்பங்களின் மூத்த அண்ணன், தமிழகத்தினுடைய நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன், எடப்பாடியார் அவர்களை வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் நகரத்தின் ஒரு பகுதியில் மீனவ சமுதாயத்தினர் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய ஜீவாதாரத் தொழில் மீன் விற்பனை செய்து பிழைத்து வருவதாகும். சென்னைக்குப் பக்கத்தில் அரக்கோணம் உள்ளதால், சென்னையிலிருந்து மீன்களைக் கொண்டு வந்து சாலை ஓரங்களில் வைத்து விற்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஒரு மீன் விற்பனைக் கூடம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.